1973 ஏப்ரல் 2]

Subway near Moore Market

* 603 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to construct any subway near the Moore Market in Madras; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா : (அ) ஆம்

(இ) ரூ. 11.50 லட்சம் மதிப்பீட்டில் 1972-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அந்த வேலைக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் தலைமைப் பொறியாளர் அந்த வேலைக்கு ஒப்பந்தப்புள்ளிக் கோரியிருக்கிறார்.

Teynampet-Parrys Corner traffic study

* 604 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Highways Research Station, Madras has undertaken any study for the formation of an express way between Teynampet and Parrys; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்;

(இ) அண்ணா சாலையில் செனடோப் ரோடுக்கும் வாலாஜா கேட்டுக்குமிடையே வாகனப் போக்குவரத்து குறித்து விரிவான போக்குவரத்துக் கணக்கெடுப்பு வேலைகள் 1971-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மேற்கொள்ளப்பட்டது. அண்ணா சாலையில் இருந்து பிரிந்து செல்லும் அல்லது இணைகின்ற சாலைகளில் செல்லுகின்ற வாகனங்களின் கணக்கெடுப்பு வேலையும் சாலையின் அமைப்பு, சீர்படுத்தும் வேலைகள் போக்குவரத்திற்கேற்றவாறு மேம்பாட்டு வேலைகள் மேற்கொள்ளல் போன்ற கருத்துக்களை நினைவில் கொண்டு விரிவான ஆராய்ச்சி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி ஆராய்ச்சிக் குறிப்புகளை ஆய்வுசெய்து பார்க்குமிடத்து வாகனப் போக்குவரத்து நாள்தோறும் பெருகிவருகின்றது. இனி 20 ஆண்டுகளில் வாகனப் போக்குவரத்து பல மடங்கு அதிகமாகப்

பெருகிவிடுமெனவும் தற்போதுள்ள சாலை வசதிகள் வருங்காலப் போக்குவரத்துத் தேவைகளை ஈடேற்றப் போதுமானவையல்ல என்றும் தெரிய வருகின்றது.

(திரு. நா. வீராசாமி தலைமை)

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இதன் அடிப்படையில் எடுக்கப்பட்ட மேல்நடவடிக்கை யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்த வரைவின் அடிப்படையில், வாகனப் பெருக்கம் காரணமாக 'சப்டரோனியன்' திட்டத்தை அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். தலைமைப் பொறி யாளரால் அனுப்பப்பட்ட அந்தத் திட்டம் அரசின் பரிசிலனையில் இருந்து வருகிறது. இத்திட்டத்தை நிறைவேற்ற உத்தேசமாக ரூ. 120 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்த வாகன நெருக் கடியைத் தீர்ப்பதற்காக—சென்னை-அண்ணா சாலை வழியாக வரும் பெரிய லாரிகள், பஸ்கள் போக்குவரத்து அதிகமாக இருக்கிறது— சப்-வேக்கள் அமைத்து, பை-பாஸ் ரோடுகள் அமைக்க அரசிடம் திட்டம் இருக்கிறதா? அப்படியானால் அந்தத் திட்டத்தை எப்போது அமல்செய்ய அரசு முன்வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னையில் 'பை-பாஸ் ரோடு' ஒன்றைத் தேசிய நெடுஞ்சாலை மூலமாக அமைக்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டு, அது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அப்படி சென்னையில் அந்த பை-பாஸ் ரோடு திட்டம் நிறைவேற்றப்பட்டால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரிப் போக்குவரத்து நெருக்கடி தீரும்.

திரு. ஆ. பரந்தமான் : தலைவரவர்களே, அண்ணா சாலையி லிருந்து பாரிமுனைக்கு நாளுக்கு நாள் போக்குவரத்து அதிகமாகி வருவதால், அதை முன்னிட்டு, உடனடியாக மத்திய அரசோடு தொடர்புகொண்டு, அண்ணாச் சாலையிலிருந்து-பாரிமுனைக்கு சுரங்கப்பாதை அமைக்க அரசு முன்வருமா?

1973 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தையும் நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம். அதற்கு ஆகக்கூடிய செலவு ரொம்ப அதிகமாக இருக்கிறது என்றாலும், இந்த 'சப்டரேனியன்' திட்டத்தில் அதுவும் சேரும் என்று நினைக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சார், சென்னை நகரப் பாதைகளையெல்லாம் ஒவ்வொரு 10 வருஷத்திற்கு ஒரு முறை விரிவு படுத்தவும், பை-பாஸ் ரோடு, சுரங்கப்பாதை அமைப்பதும் மிகவும் அவசியமானது என்ற முறையில் இந்தப் பிரச்சினை ஆராயப்பட்டிருக்கிறதா ; அப்படி ஆராயப்பட்டிருக்குமானால் எந்தெந்த நகரங்களில், இம்மாதிரியான விரிவுபடுத்தும் பாதைகள், சுரங்கப் பாதைகள் அமைப்பது ஆகியவற்றைச் செய்ய அரசு முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த '-பை-பாஸ் ரோடுகளைப்' பொறுத்தவரையில் பெரிய நகரங்களில் சில இடங்களில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சில இடங்களில் பரிசீலிக்கப்பட்டு, மத்திய அரசாங்கத்தின் அனுமதிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இப்போது நான் சொல்லி இருக்கும் திட்டம் சென்னை நகரைப் பொறுத்தவரையில் மவுண்ட் ரோடிலிருந்து தேனாம்பேட்டை வரை, தேனாம்பேட்டையிலிருந்து பாரீஸ் வரையில் ஒரு 'சப்டரேனியன் எக்ஸ்பிரஸ் வே' போடுவது என்ற திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. பரிசீலிக்கப்பட்ட பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, ஜப்பான் போன்ற நாடுகளில் இத்தகைய நெருக்கடிப் பிரச்சினைகளை நல்ல முறையில் தீர்த்து இருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய இன்ஜினியர்களையெல்லாம் அங்கே அனுப்பி, அங்கேயுள்ள நடைமுறையைக் கண்டறிந்து வர அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய பொறியாளர்கள் ஜப்பானுக்குப் போய் வந்திருக்கிறார்கள். உலக அமைப்பின்மூலமாக நம்முடைய தலைமைப் பொறியாளர் ஜப்பானுக்குப் போய் வந்திருக்கிறார்கள்.